REGD. M 4642.

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டு சந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலேயா நாடு 12 காசு

மலர் 7 | 6–3–49 | இதழ் 36

சென்றவாரத் தொடர்ச்சி

செக்கோஸ்லோவேகியா

5

[அண்ணாதுரை]

அந்த நாட்களிலே, இருந்து வந்த அரசியல் அமைப்பின்படி, ஆஸ்திரிய நாட்டு மன்னன், இரண்டாம் பெர்டினண்டு, செக்கோ நாட்டுக்கும் மன்னனாகவேண்டிய நிலை, வந்தது. பெர்டினண்டு, ஹாப்ஸ்பர்க் வம்சம்—ஜெர்மன் ஆதிக்கக்காரரின் தலைவன்—கத்தோலிக்க மார்க்கத்தின் காவலன்! எனவே அவன், மன்னனாவதை, செக்கோ நாட்டுமக்கள் எதிர்த்தனர். போர் மூண்டது — பெர்டினண்டுக்கும் செக் மக்களுக்கும். 1620-ம் ஆண்டு, மக்கள் தோற்று விட்டனர். —பெர்டினண்டு பெருவெற்றி பெற்றான்—செக் மக்களை ஆளத்தொடங்கினான்—ஆளவா!—மாளச் செய்யலானான்.

வெள்ளைமலைப்போர் என்று குறிக்கப்படும் இப்போர் செக்கோ நாட்டுமக்களை, அடிமைப் படுகுழியில் வீழ்த்தும் சம்பவமாயிற்று. வெற்றி, வெறியைக் கிளப்பிற்று! வீழ்ச்சியுற்ற மக்களை உருத்தெரியாமல் ஒழிக்கும் முயற்சியில் ஈடுபடலானான்.

“என்னையா எதிர்த்தீர்கள்! என் ஆட்சியையா, கூடாது என்று கூறினீர்கள். இதோ வாகைசூடிவந்திருக்கிறேன், காட்டுகிறேன், எனக்குள்ள பலத்தை” என்று மட்டும் கூறி, யாரார், தன்னை எதிர்க்கும் ராணுவ நடவடிக்கையிலே முன்நின்றனரோ, அவர்களைச் சிறையிலிட்டோ கொன்றோ, கோபத்தைத் தீர்த்துக் கொள்வது தான், கொடுங்கோலனுக்கும், வழக்கமாக இருந்துவந்தது.

பெர்டினண்டு இந்த அளவுடன் நின்றுவிடவில்லை. செக் மக்கள் தன்னைமட்டுமல்ல, ஜெர்மன் ஆதிக்கத்தை, அதைமட்டுமல்ல, கத்தோலிக்க ஆட்சிமுறையை, எதிர்த்தனர்—தாய்மொழி — தன்னாட்டுக்கலை—என்று இறுமாப்புடன் பேசினர்—அன்னிய நாகரிகம், மொழி ஆகாது என்று ஆர்ப்பரித்தனர்— எனவே, இவ்வளவுக்கும் சேர்த்துப் பழிவாங்கியாக வேண்டும் என்று வெறி கொண்டான். திட்டமிட்டுப் பழிவாங்கலானான்.

செக்நாட்டுப் பெரும் பண்ணைகளைப் பறிமுதல் செய்தான்—ஏழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கவா? அல்ல!—தன் படைவீரர்களுக்குக் கொடுத்தான்! செக்மாளிகைகளிலே, ஆஸ்திரியச் சீமான்கள் செருக்குடன் உலவலாயினர்! மாதா கோயில்களில் இருந்த புராடெஸ்டெண்டு பாதிரிகளை விரட்டினான் — கத்தோலிக்கக் குருமார்களைக் கொலுவீற்றிருக்கச் செய்தான் — யார் இவன்? செக்மொழியின் மேன்மையைப் பேசித் திரிந்தவனா? பிடி! அடி! சுடு!—என்று உத்தரவு பிறந்தது.

செக்மக்களுக்கு, தாய் மொழியிலே இசை இருக்கவேண்டுமென்று, புதிய பாடல்கள் இயற்றியவனா இவன்! போடு சிறையில்! என்று உத்தரவு பிறந்தது.

இதென்ன குவியல்? ஓஹோ! செக்மொழியிலே உள்ள ஏடுகளா! எடு தீப்பந்தத்தை! கொளுத்து இவைகளை!! — என்று உத்தரவு கிளம்பிற்று.

செக்மொழி ஆராய்ச்சி நிலையம்! —பெயரைப்பார்! இடி, கட்டடத்தை!

இதுபோன்ற பல கொடுமைகள் செய்யப்பட்டு, செக் நாட்டுமக்களின், தனிப்பண்பு அழிக்கப்பட்டது—நாச வேலை நடத்தப்பட்டது.

மீண்டும் தாய்மொழிக்குத் தாழ்நிலை வந்தது. செக்நாட்டுமொழி, சிரழிவானது என்று பேசப்பட்டது, செக்நாட்டிலேயே!

ஜெர்மானிய மொழியே உயர்ந்தது, உயர்ந்தோர் பேசும் மொழி என்று கூறப்பட்டது.

தேவ பாஷையல்லவா, சமஸ்கிருதம், இப்போதும், மயிலை அன்பர்களின் கருத்துப்படி!

நமஸ்காரமும் — ஆசிர்வாதமும் தானே, உத்கிருஷ்டமான வாசகங்கள் அவர்களின் கருத்தின்படி.

செக்கோ நாட்டிலே பெர்டினண்டு பெற்ற வெற்றி செக் மொழியை அழிக்கும் காரியத்தைக்

செய்யலாயிற்று, வேகமாக, பயங்கரமான முறையிலே!

செக்மக்கள், ஏதும் அறியார்! மொழி, வளமற்றது! இலக்கியம், அவர்களுக்குக் கிடையாது! பண்பு, தெரியாது! அடிமைகள்! மூடமதியினர்! அவர்களின் மொழி காட்டுமிராண்டிக்காலத்தது -- கவர்ச்சியற்றது என்று, ஆணவமாகப் பேசினர்.

இன்று, இங்கு, கூறவில்லையா' தமிழனுக்கென்று ஒரு தனிக்கலை இல்லை, தமிழ்ப் பண்பாட்டு விளக்கமாக ஒரு இலக்கியமில்லை, உள்ளது அவ்வளவும், தேவபாஷையின் தழுவுதலால் கிடைத்தவை, என்று!

எத்தர் அதுபோல் கூறினாலும் பரவாயில்லை, கோபமும், பிறகு விழிப்பும் ஏற்படும்! ஏமாளிகள் இதனை ஏற்றுக்கொண்டு பேசுகிறார்களே!!

திருக்குறள் கூடத் தமிழனின் பண்பு விளக்கத்துக்கான தனிச் சிறப்புள்ள நூல், என்று கூற மனமற்று, திருக்குறள், வடமொழியிலுள்ள சுக்ர நீதியின் மொழி பெயர்ப்பு—வழி நூல்—முதல் நூலல்ல என்று பேசும் சிலர்கள், தமிழ் இனத்திலேயே உள்ளனர் அல்லவா? இது போன்ற இழிநிலையை; பெர்டினாண்டு, செக்கோ நாட்டிலே ஏற்படுத்திவிட்டான்! தாயகம் அடிமை நாடாயிற்று!

தாய்மொழி மீண்டும் தோட்டம் வயல், காடுமேடு களனி ஆகிய இடங்களுக்குச் சென்று பதுங்கி வாழலாயிற்று! அடிமைகள்—கூலி மக்கள் பேசும் மொழியாகிவிட்டது, செக்மொழி. ஆட்சி அலுவலகங்களிலே, பல்கலைக்கழகங்களிலே, ஜெர்மன் மொழி ஆதிக்கம் செலுத்தலாயிற்று. வீழ்ச்சி மீண்டும்! தாய்மொழியை அழித்து, அதன்மூலம், நாட்டை நிலைகுலையச் செய்யும் திட்டம் மீண்டும்! இந்தக் கொடுமையான நிலையிலே, செக்கோ நாடு, மூன்று நூற்றாண்டுகள் இருக்க நேரிட்டது — மொழி இழந்து—வாழ்க்கை வழி இழந்து.

(தொடரும்)

சரித்திர சித்திரம்

3½ கோடி பொன்! 110 பெண்!!

கடைசியில் ஆண்டியானார்

—✲—

பொக்காரா நாட்டின் அதிபதியாயிருந்த ஸெய்யதுமீர் ஆலம்கான் காபூல் எல்லைப்புறத்தில் பரதேசியான பரிதாபச் செய்தி கீழே தரப்பட்டிருக்கிறது.

அவர் 110 அழகியமங்கையருக்கு நாயகராகவும் மூன்றரைக்கோடி பொன்னுக்கு அதிபதியாயும் இருந்தார். அவருடைய ஆளுகையில் 12½ லக்ஷம் மக்களுமிருந்தனர். ருஷிய போல்ஸ்விக்குகள் அவருடைய நாட்டைப்பிடுங்கிக் கொண்டு அவரை அவர்கள் ஒரு பிச்சைக்காரர் போலாக்கிவிட்டார்கள்.

சர்வதேச மகாநாட்டுக்குத் தூது

பொக்காரா தேசத்தை போல்ஷ்விக்குகள் கையிலிருந்து மீட்டுக் கொடுக்க வேண்டுமென்று ஜினிவா சர்வதேச மகாநாட்டுக்கு அவர் ஒரு தூதரை அனுப்பியிருந்தார். ஒரு சோவியத்து ஸ்தானாதிபதி பொக்காரா அரசாட்சி நடத்தி வந்தார். ஸெய்யதுமீர் ஆலம்கான் சொத்துக்களை யெல்லாம் கொள்ளை யடித்து அந்த ஸ்தானாதிபதி ருஷியாவுக்கு அனுப்பினார்.

கற்கோட்டை

8-மைல் நீளமும் 28 அடி-உயரமுமுள்ள ஒரு கற்கோட்டை நகரத்துக்குள் அவர் வசித்து வந்தார். அந்தக் கோட்டைக்கு 11-வாயில்கள் இருந்தன.

அந்த நகரத்தில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வசித்து வந்தனர். மத்திய ஆசியாவில் அது ஒரு முக்கிய வியாபார ஸ்தலமா யிருந்தது. அந்தக் கோட்டையின் மத்தியில் மீர் ஆலம்கான் சொத்துகள் முழுதும் ஒரு கல்லறைக்குள் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. மூன்றரைக் கோடி பவுன் விலை பெறுமான தங்க நாணயங்கள் அவரிடமிருந்தன. கல்லிழைத்த நகைகளும் கணக்கில்லாமலிருந்தன. பொக்கிஷக் கல்லறையை அவர் இரவில்தான் திறப்பது வழக்கம். தினம் இரண்டு வேளை அவர் பொக்கிஷத்தைப் பரிசோதனை செய்துவந்தார்.

விநோத அரசாட்சி

கீழைத் தேச மன்னர்களைப்போல் அவர் மிக விநோதமாக அரசாட்சி புரிந்துவந்தார். பட்டத்துக்கு உரிமை பாராட்டிய 4 சகோதரர்களையும், 25-பந்துக்களையும் கொலை புரிந்துவிட்டு அவர் பட்டத்துக்கு வந்தார். அரசியல் கிளர்ச்சிக்காரர்களையும், சூழ்ச்சிக்காரர்களையும் தாட்சண்யமின்றிக் கழுவேற்றினார்.

110 சுந்தரிகள்

அந்தப்புரத்தில் 110 சுந்தரிகளை மனைவியராகவைத்திருந்தார். பழைய ருஷியப் படையில் ஒரு மேஜர் ஜெனரலாகவும், ஜார் சக்கரவர்த்தியின் மெய்காப்பாளராகவும் இருந்தார். ஜார் காலத்தில் அவரே சர்வாதிகாரியாக இருந்தார். 1920 ஆகஸ்டுமாதத்தில் அவரது அதிர்ஷ்டம் தொலைந்தது.

வெகு காலமாக சோவியத்துக்காரர் பொக்காரா இளைஞர் சங்கத்தாருக்கு இரகசியமாகப் பண உதவி செய்துகொண்டிருந்தார்கள். ஆலம்கானுக்கு எதிராகப் புரட்சி செய்யவே அவர்கள் பணவுதவி செய்தார்கள். இளைஞர் சங்கத்தார் புரட்சி செய்யத் தொடங்கினர்.

1920-ஆகஸ்டு 5-ந்தேதி சோவியத்துப்படை பொக்காராவில் புகுந்தது. ஆலம்கான் துருப்புகள் எல்லாம் கோட்டைக்கதவுகளைத்திறந்து போட்டுவிட்டு ஓடிவிட்டன. ஆலம்கான் திடுக்கிட்டார். தன்மூன்றரைக் கோடி பவுனையும் பெற்றுக்கொண்டு தன்னைக் காப்பாற்றவேண்டும் என்று டெல்லிக்குத் தூது அனுப்பினார். டெல்லி சர்க்கார் அதற்கு உடன்படவில்லை. எனவே அவர் ஆப்கானிஸ்தானத்துக்கு ஓடிவிட்டார். அப்பால் துருக்கிஸ்தானம் பிரிட்டிஷ் ஏஜண்டின் உதவிகொண்டு 500 ஏவலாட்களுடனும் கொஞ்ச சொத்துக்களுடனும் காபூலுக்கு வந்து சேர்ந்தார்.

அவரது புத்திரர்களில் இருவரை மாஸ்கோவுக்கு நாடுகடத்திவிட்டார்கள். அவர்களைச் சோவியத்து சர்க்கார் ஒரு கலாசாலையில் படிக்கவைத்தார்கள்.

வேதகாலக் கடவுள்!

விவேக காலத்தில் விலக்கப்பட்டார்!

அக்னிபகவானின் ஆபாச லீலைகள்!

கடவுள் இல்லை! என்றவுடனே, நமது ஆத்திக அன்பர்கள், "இவன் யாரோ சுயமரியாதைக்காரன்போல் இருக்கிறது; அதனாலேதான் கடவுள் இல்லை என்று கூறுகிறான்" என்று கூறுவர். ஆனால், நாம் இங்கு குறிப்பிடுவது அந்தப் பொருளில் அல்ல. கடவுள் என்பதாக ஒன்று இருக்கிறதா? இல்லையா? தேவையா? இருக்கிறதென்றால் எப்படியிருக்க வேண்டும்? எதற்காக இருக்கவேண்டும்? என்ன இயல்பினதாக இருக்க வேண்டும்? என்பனவற்றைப் பற்றி ஆராய்ந்து, மக்களின் வாழ்க்கை நலத்துக்கு ஏற்றவிதமாக அமையும் ஒரு கடவுளை எந்தச் சுயமரியாதைக்காரனும் இதுவரை கண்டித்ததில்லை. கண்டிக்கவேண்டிய அவசியமும் அவர்களுக்குக் கிடையாது. மக்களின் வாழ்வைச் சுரண்டினாலன்றித் தன் வாழ்வை நடத்தமுடியாதென்ற நிலையிலுள்ள கடவுளைத்தான் தன்மானக்காரன் கண்டிக்கிறான். இதன் உட்பொருளை உணராதாரும், உணரும் ஆற்றலில்லாதாரும்தான் 'கடவுளை நிந்திக்கும் கயவர்' என்று தன்மான இயக்கத்தினரைத் தாறுமாறாகப் பேசுகின்றனர். தாம் பேசுவது தவறுதான் என்பதை உள்ளபடியே உணருவோரும் இந்தத் 'திருப்பணி'யைச் செய்வதால், தாங்கள் ஏதோ நல்ல காரியத்தை நாட்டுக்குச் செய்வதாக மக்கள் எண்ணுவர் என்ற பூரிப்புடன், அறிவு ஆராய்ச்சி ஆகிய சிரிய பண்புகளுக்கு வெகு தொலைவில் நின்றுகொண்டு இந்தக் காரியத்தை விடாப்பிடியாகச் செய்கின்றனர். மக்களிற் பெரும்பாலோர் அறிவாராய்ச்சிக்கு அப்பால் நிற்கும் இரங்கத்தக்க நிலையை இவர்கள் தங்களுக்குப் பக்கபலமாக வைத்துக்கொண்டு, எதை எப்படிச் சொன்னாலும் கேட்பவர் யார் என்ற எக்களிப்புடன், அல்ல, ஏமாந்த இயல்புடன் இவ்விதம் பேசுகிறார்கள் – செய்கிறார்கள்!

கால மாறுதலையும், அதற்கேற்ப மக்களின் கருத்து மாறுபடுவதையும், அக்கருத்து மாற்றம், மாற்றமற்ற நிலைபேறுடையதாகச் சொல்லப்படும் மகேசுவரனையும் அவனது மகத்துவங்களையுமே மாற்றியமைக்கும் தன்மையைப் பெற்றுவிடுகிறதென்பதையும் இவர்கள் உணர்வதில்லை. உலகத்திலே உண்டாகும் வாழ்வும் தாழ்வும் மக்களுக்கு மட்டும் ஏற்படுவதில்லை; மக்களைப் படைத்ததாகச் சொல்லப்படும் மகேசுவரனுக்குங்கூட ஏற்படுவதுண்டு என்று நாம் சொன்னால், நம்மை நாத்திகப் பட்டியில் சேர்த்துவிடுகிறார்கள் நம்பனடியார்கள். நாமல்லாத வேறு எவரேனும் இந்த உண்மையைக் கூறினால், இவர்கள், யாதுகாரணம் பற்றியோ கண்மூடி மௌனியாகி விடுகிறார்கள். உண்மையை யார் கூறினாலும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென்ற உயர்ந்த பண்பை இவர்கள் மேற்கொள்ளாததும் — மேற்கொள்ளும் மேலான அறிவைப் பெறாததுமேதான் இதற்குக் காரணமாகும். 28–2–49-ல் வெளிவந்த 'தினசரி' தனது 'மடலி'ல் ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிறது. அதாவது, சிலர் நினைப்பது போல், கடவுள் என்று அழைக்கப்படும் பொருள், என்றும் அழியாத நிலைபேறுடையது என்று கூறப்படுவதை மறுத்துரைக்கும் முறையில் 'நம்முடைய' பழைய கடவுளரில் முக்கியமான ஒருவரின் கதையை மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

"வேதகாலத்து மக்கள் அக்னி பகவானைப் பிரதான தேவதையாகக் கருதி வழிபட்டு வந்தார்கள்"

என்று எழுதியிருப்பதோடு, அக்னி பகவானுக்கு அந்தக் காலத்தில் அளிக்கப்பட்ட முதலிடம் இந்தக் காலத்தில் அளிக்கப்படுவதில்லையென்றும், அவரை இப்போது அட்டதிக்குப் பாலகர்களில் ஒருவராக்கி எங்கோர் ஒருமூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டதென்றும் கூறுகிறது. வேதகாலத்தில் மக்களின் வழிபாட்டுக்குரிய தெய்வமாக விளங்கிய அக்னி பகவான், விவேக காலமாகிய இந்தக் காலத்தில் ஏன் ஒரு மூலையில் ஒதுக்கிவைக்கப்பட்டார் என்பதற்குரிய காரணத்தையும் 'தினசரி மடலே' கூறுகிறது.

"உலகத்திலே வாழ்வும் தாழ்வும் மனிதர்களுக்கு மட்டுமே ஏற்படுவதில்லை. தெய்வங்களுக்கும் கிட்டிவிடுகிறது. ஒரு காலத்தில் மிகப் பிரபலமாக மக்கள் எல்லாரும் வழிபட்டு வந்த தெய்வம் மற்றொரு காலத்தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுகிறது. அதேபோல், முன்னாளில் பெயர் கேட்டிராத மற்றொரு தெய்வம் திடீரென்று தோன்றி எல்லோராலும் பூசிக்கப்பட்டு வருகிறது. உலகம் தோன்றிய நாள்முதல் மக்கள் வழிபட்டு வந்த தெய்வப் பெயர்களையும், அவர்களை வழிபட்ட முறையையும் கவனித்தால் இது நன்கு விளங்கும். ஒருகாலத்தில் முக்கியமான தேவதையாக இருந்து இப்போது ஏதோ ஒரு சிறு தேவதையாக மாறி விட்டதற்கு அக்னியை உதாரணமாகக் காட்டலாம்."

என்று எழுதியிருக்கிறது. ஒரு காலத்தில் முக்கியமான தெய்வமாக இருந்த அக்னிபகவான் ஏன் இப்போது ஏதோ ஒரு சிறு தேவதையாக மாறிவிட்டது? மக்கள் அனைவருடையவும் வழிபாட்டுக்குரிய முதல் தெய்வமாக இருந்த அக்னிபகவான் இப்போது எங்கே இருக்கிறார் என்று தெரியுமா? கேட்டால், அட்டதிக்குப்பாலகராய்த் தென் கிழக்கு மூலையில் இருக்கிறார் என்று ஆத்திக அன்பர்கள் கூறுவர். எட்டுத் திசைகளுக்கும் ஏகபோக தெய்வமாக இருந்தவர், இன்று ஏன் அட்டதிக்குப் பாலகரில் ஒருவராய்த்

தென் கிழக்கு மூலைக்கு ஓடினார் என்று கேட்டால் காரணம் கூறமாட்டார்கள். எல்லாம்வல்ல கடவுளாய் இருந்த ஒருவர், உலக வாயில்களில் ஒன்றான தென்கிழக்கு வாயிலைக் காத்து நிற்கும் காவலாளியாக ஏன் மாற்றப்பட்டார் என்று கேட்டால் மறுமொழி கிடைக்காது. 'தினசரிமடல்' குறிப்பிடுவதுபோல், பேரே கேள்விப்படாத புதுத் தெய்வம் என்றுகூட அக்னி பகவானைக்கூற முடியாதே! வேதகாலத்தில் இருந்த முக்கிய தெய்வமாயிற்றே! அப்படி இருந்தும் இன்று அவர் கடவுட் பதவியின்றும் காவலாள் பதவிக்கு இறக்கப்பட்ட காரணம் என்ன? கலெக்டராக இருந்த ஒருவரைப் பில்லைச் சேவகனாக மாற்றுவதைவிட இது மிகவும் கீழ்த்தரமானதாக வன்றோ இருக்கிறது! அன்று கடவுள்! இன்று காவற்காரன்! எவ்வளவு பரிதாபகரமான மாறுதல் பாருங்கள்! ஒருகாலத்தில் கடவுளாக இருந்த ஒருவர் இப்பொழுது இல்லை; அந்த இடத்திற்கு வேறொருவர் கடவுளாக வந்துவிட்டார் என்று கூறினாலாவது பரவாயில்லைப் போலிருக்கிறது. ஆனால், ஒருகாலத்தில் (வேதகாலத்தில்) கடவுளாக இருந்து எல்லோருடைய வழிபாடுகளையும் பெற்ற ஒருவரே இன்று காவற்காரனாக இருக்கிறார் என்றால், 'நம்முடைய' கடவுளரின் மாண்பு எத்தகையது என்பதை எடைபோட்டுப் பார்க்கும் நிகழ்ச்சியாகவன்றோ இது அமைந்திருக்கிறது!

வேதகாலக் கடவுளான அக்னி பகவான் விவேக காலத்தில் (இப்போது) ஏன் பதவியின்றும் இறக்கப்பட்டார் என்பதற்குரிய காரணங்கள் பலவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கு வெளியிடுகிறோம்.

1. அக்னி பகவானுக்கு இரண்டு முகம், ஏழு நீண்ட நாக்குகள், நாலு கொம்புகள், மூன்று கால்கள், ஏழு கைகள். இவ்விதமாக அவருடைய உடல் அமைந்திருக்கிறது. நம்முடைய கடவுளர் பலருக்குப், பலமுகங்களும் பல கைகளும் அமைந்திருக்கிறதென்று சொல்லப்பட்ட போதிலும், அக்னிக்கு அமைந்திருப்பது போன்ற ஒன்றுக்கொன்று முரண்பட்ட முறையில் உடலுறுப்புகள் பெரும்பாலும் அமையவில்லை யென்று கூறலாம். ஒரு கடவுளுக்கு இரண்டு முகங்கள் இருந்தால், அதற்கேற்ப நாலு கைகள் இருக்கும். ஆனால் அக்னிக்கு முகம் இரண்டு! கைகள் ஏழு! இரண்டு முகங்களுக்கு ஏழு நாக்குகள்! இந்த ஏழு நாக்குகளில் மூன்று ஒரு முகத்திலும், நான்கு இன்னொரு முகத்திலுமாக அமைந்திருக்கிறதோ அல்லது முகமல்லாத வேறு எந்த உறுப்பிலாவது இந்த ஏழு நாக்குகளும் அமைந்திருக்கின்றனவோ என்பது விளக்கப்படவில்லை, இனி, அவருக்கு இருப்பதாகச் சொல்லப்படும் மூன்று கால்களும் அவருடைய உடலில் எந்தப் பகுதிகளில் அமைந்து இருக்கின்றன என்பதற்கும் விளக்கம் தரப்படவில்லை. அக்னிக்கு நாலு கொம்புகள் இருப்பதாகச் சொல்லப்படுவதால், ஒருவேளை அவர் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவாக இருக்கும்கடவுளாதலால், அவருக்கு விலங்குகளுக்கு இருப்பதுபோன்ற கொம்புகள் இருக்கின்றன என்று சொல்லலாமாயினும், ஒரு கடவுள், மனிதனுக்கும் விலங்குகளுக்கும் மட்டும்தான் கடவுளா மற்ற உயிர்களுக்கும் கடவுளா என்ற ஐயப்பாடு எழுகின்றது. எல்லா உயிர்களுக்கும் பொதுவான கடவுள் என்றால், மற்ற உயிர்களுக்கு இருக்கும் உடலமைப்புகளும் இருக்கவேண்டுமே! ஆனால், அக்னி பகவானுக்கு மனிதனுக்கு இருக்கவேண்டிய இரண்டு கால்களும் இல்லை. விலங்குகளுக்கு இருக்கும் நாலு கால்களும் இல்லை. மூன்று கால்களேஉள்ளன. அதோடு பறவைகளுக்கு இருக்கவேண்டிய ரக்கையும் இல்லை. ஆகவே, மனிதன்-விலங்கு—பறவை ஆகிய எந்த உறுப்புகளுக்கும் பொருந்தாத ஒரு உடலமைப்பைக் கொண்டிருப்பதன்காரணமாக இவரைக் கடவுள் பதவியினின்றும் நீக்கியிருக்கலாமல்லவா!

2. தக்கன் செய்த யாகத்தில் அக்னி பகவான் சிவனுக்கு எதிராகத் தக்கன் பக்கம் இருந்து உதவி செய்ததால், சிவன் சினங்கொண்டு, வீரபத்திரர் என்ற ஒரு கடவுளை உண்டாக்கி, அக்னியின் ஏழு நாக்குகளையும் கைகளையும் அறுக்கும்படி செய்தார். நாக்கும் கையும் அற்ற ஒருவரைக் கடவுளாக வைத்து வணங்குவது கூடாதென்ற காரணத்தால் அக்னி பகவானிடம் இருந்த கடவுட் பதவியைப் பறித்திருக்கலாம்.

3. ஒரு சமயம், சப்தரிஷிகள் என்றழைக்கப்படும் ஏழு முனிவர்களும் யாகஞ் செய்தனர். அந்த யாகத்துக்குச் சென்றிருந்த அக்னி பகவான் ஏழு முனிவர்களின் மனைவிமார்களைக் கண்டு மையல் கொண்டான். அக்னியின் மனைவியாகிய சுவாகாதேவி என்பாள் அருந்ததி நீங்கிய ஆறு பெண்களின் வடிவங்களை எடுத்துத் தன்னுடைய கணவனின் இச்சையை நிறைவேற்றி வைத்தாள். பிறர் மனைவியர்மீது மையல்கொண்ட ஒருவன் கடவுளாக இருப்பதற்கு அருகதையற்றவன் என்ற காரணத்தால் அக்னியைக் கடவுட் பதவியினின்றும் நீக்கியிருக்கலாம்.

4. அக்னி பகவான், அவுரவ மாமுனிவரின் மனைவிமீது காதல் கொண்டு, அவளுடைய தொடையில் பலகாலம் மறைந்திருந்தான். வேதகாலத்து விற்பன்னர்கள் தங்களுடைய வழிபடு கடவுளாகிய அக்னி பகவான் பலகாலந் தேடியும் அகப்படாமல் போகவே, அவருடைய இடத்துக்கு வேறொருவரைக் கடவுளாக நியமித்திருக்கலாம்.

5. இராம — இராவணப் போர் நிகழ்ந்தபோது இந்த அக்னி பகவான், குரங்கு வடிவமெடுத்து **நீலன்** என்ற பெயரோடு இராமருக்கு உதவி செய்தான். அக்னி பகவான், தன்னுடைய கடவுள் வேலையை விட்டு விட்டு, இராமர் படையில் போய்ச் சேர்ந்த காரணத்தால், அவர் கடவுட் பதவியினின்றும் நீக்கப்பட்டிருக்கலாம்.

6. ஒரு சமயம், இந்த அக்னி பகவான் சுதரிசனை என்ற பெண் மீது காதல் கொண்டான். ஆனால், அவளுடைய தந்தையான சுயோதன ராசன் தன்னுடைய பெண்ணை அக்னிக்குக் கொடுக்க விரும்பவில்லை. இதனை அறிந்த அக்னிபகவான் பூலோகத்தில் யாகாதி காரியங்கள் நடைபெறாமல் தடைசெய்துவிட்டார். பின்னர் சுயோதனராசன் தன்னுடைய புதல்வி சுதரிசனை என்பவளை அக்னிக்கு மணம் முடித்து வைத்தான். ஏற்கெனவே ஒருமனைவி இருக்கும்போது, இன்னொரு பெண்ணையும் மணந்து கொண்டதால், கண்ட கண்ட பெண்கள் மீதெல்லாம் காதல் கொள்ளும் ஒருவரைக் கடவுளாக வைத்திருந்தால் பெருந்தொல்லையாக வந்து முடியுமே என்றஞ்சி அவரைக் கடவுட் பட்டியிலிருந்து விலக்கி இருக்கலாம்.

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 6-3-49 [காஞ்சி

நாம் யாருக்கு எதிரி?

*

திராவிடர் கழகத்தாராகிய நாம் பார்ப்பனர்களுக்கு எதிராக வேலை செய்கிறோமென்றும், தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனர்கள் திராவிடர்கழகத்தாருக்குப் பயந்துவாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதென்றும், திராவிடர் கழகத்தாரால் செய்யப்பட்டு வரும் 'ஆபத்துக்களை' ஒழித்துப் பார்ப்பனர்களைக்காப்பாற்ற வேண்டுமென்றும் 1-3-49-ல் நடைபெற்ற பட்ஜெட் விவாதக் கூட்டத்தின் போது தோழர் காளேஸ்வரராவ் அவர்கள் சட்டசபையில் பேசியிருக்கிறார்.

பட்ஜெட் கூட்டத்தின் போது தோழர் காளேஸ்வரராவ் இந்த விஷயத்தை ஏன் பேசினார் என்பது தெரியவில்லை. ஒருவேளை, திராவிடர் கழகத்தாரை ஒழித்துக் கட்டுவதற்கும் பட்ஜெட்டில் பணம் ஒதுக்கி, அதற்காக ஒரு நிதி தனியாக ஏற்படுத்த வேண்டுமென்று கருதி இங்ஙனம் பேசினாரோ என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. இல்லையேல், பட்ஜெட் விவாதத்தின்போது 'கருஞ்சட்டை' ஒழிப்பு மசோதா ஏன்வரவேண்டும்? பட்ஜெட்டுக்கும் கருஞ்சட்டைக்கும் என்ன சம்பந்தம்? என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

இதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்கூடச் சட்டசபையில், திராவிடர் கழகத்தாரைப் பற்றிப் பேசப்பட்டது. அதாவது, திராவிடர் கழகத்தார் பார்ப்பனர்களுக்கு எதிராக அவர்களை நிந்தித்துப் பேசியும் எழுதியும் வருகிறார்கள் என்றும், அவற்றைச் சர்க்கார் கவனித்துத் தக்கநடவடிக்கைஎடுக்கவேண்டுமென்றும் சேலம் பிராமண சேவா சங்கத்தார் ஒரு மகஜரைச் சர்க்காருக்கு அனுப்பியது உண்மையா என்று சட்டசபையில் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கேள்விகேட்டார். அதற்குச் சர்க்கார், சேலம் பிராமண சேவாசங்கத்தாரால் அனுப்பப்பட்ட மகஜரில் உள்ள குற்றச்சாட்டுகள், நிச்சயமற்றதும், தெளிவற்றதும் விபரமற்றதுமான (Vague) வையென்றும், அவைகளை ஆதாரமாக வைத்து நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டம் இடந்தராதென்றும் பதில் கூறிவிட்டது. அந்தச் சமயத்தில் தோழர் காளேஸ்வரராவ் சட்டசபையில்இருந்தாரோ, அல்லதுசென்னைச் சட்டசபையின் தனிஏற்பாட்டின்படி குறட்டைவிடாமல் தூங்கிக்கொண்டிருந்தாரோ நாம் அறியோம்.

திராவிடர் கழகத்தார் பேசுவதும் எழுதுவதும் சட்டவரம்புக்கு உட்பட்டே உள்ளன என்று சட்டசபையில் சட்டமந்திரி தோழர் கோபால் ரெட்டி அவர்கள் வெட்டவெளிச்சமாகக் கூறிய பின்னரும், திராவிடர் கழகத்தாரை 'ஆபத்தை விளைவிப்பவர்கள்' என்ற பட்டியலில் சேர்த்து அவர்களை ஒழித்துக்கட்டிவிட்டுத் தான் மறுவேலை பார்க்கவேண்டுமென்று கூறுவதும் கொக்கரிப்பதும் மதி சிறிதளவாவது கொண்டவர்களின் பேச்சென்று கொள்ளமுடியுமா என்று கேட்கிறோம்.

சட்டசபையில் நடைபெறும் நடவடிக்கைகளைக் கவனிக்கும் ஆற்றலும் அதற்கேற்பப் பேசும் திறமையுமற்ற பலர் இன்றைய சட்டசபையை நிரப்பிக்கொண்டிருக்கிற காரணத்தால் தான், முன்பின் நடந்தவைகளையும் நடப்பவைகளையும் கவனியாமல், ஏதோ நாமும் சட்டசபையில் பேசினோம், திக்குமுக்காடும் கேள்விகளைக் கேட்டுச் சர்க்காரைத் திணற வைத்துவிட்டோம் என்ற எக்களிப்போடு வாயில் வந்ததை எல்லாம் வாரிக்கொட்டும் இரங்கத்தக்க நிலைமை ஏற்படுகிறது.

நாம் பலகாலமாகவே பேசியும் எழுதியும் வருகிறோம், நமக்குப் பார்ப்பனர்களிடத்தில் எந்தவிதமான பகைமையோ, பொறாமையோ கிடையாது என்று. நம்முடைய குற்றச்சாட்டுகள் எல்லாம் பார்ப்பனியத்தின் மீதேயன்றிப் பார்ப்பனர் மீது அல்ல என்பதைத் தெளிவாகவே விளக்கியிருக்கிறோம். பார்ப்பனியம் என்றால் என்ன என்பதையும் பல முறை புரியவைத்திருக்கிறோம்.

தீண்டாமையைப் பார்ப்பனியம் என்று கூறுகிறோம்.

புரோகிதத்தைப் பார்ப்பனியம் என்று கூறுகிறோம்.

கோயில்களில் உள்ள ஏற்பாடுகளையும் அங்கு நடக்கும் அட்டூழியங்களையும் பார்ப்பனியம் என்று கூறுகின்றோம்.

சாதியில் உயர்வு தாழ்வு கற்பிப்பதைப் பார்ப்பனியம் என்று கூறுகின்றோம்.

இவையும் இவைபோன்ற பல அறிவுக்கும் இயற்கைக்கும் புறம்பாக மதத்தின் பேராலும், சாதியின்பேராலும், கடவுளின் பேராலும் நடைபெறும் நிகழ்ச்சிகளையே நாம் பார்ப்பனியம் என்றும், அவை ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கூறுகின்றோம். இவைகள் ஒழிக்கப்பட்டால், உண்மையாகவே பார்ப்பனர் என்ற ஒரு தனிவகுப்பு இந்நாட்டில்இருக்க முடியாதென்றும், தமிழ் நாட்டிலுள்ள அனைவரும் அண்ணன் தம்பிபோல வாழமுடியுமென்றும் கூறுகின்றோம்.

நாம் எதைதைப் பார்ப்பனியம் என்றும் அவை ஒழிக்கப்பட்டாலன்றி நாட்டில் நல்லுறவு ஏற்படாதென்றும் கூறிவந்தோமோ, அவைகளில் சில, இன்று சர்க்காராலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுச் சட்டமாகவும் ஆக்கப்பட்டுவிட்டன — இன்றும் சில, சட்டமாக்கப்படும் எல்லையை எட்டிப்பார்த்தவண்ணம் உள்ளன.

உடன்கட்டை ஏறும் வழக்கத்தைப் பார்ப்பனியம் என்றும், அது ஒழிக்கப்படவேண்டும்கூறிவந்தோம். அது சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது.

குழந்தைப் பருவத்தில் இருக்கும் பெணகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் பார்ப்பனியத்தின் விளைவு என்று கூறினோம்; அதைத்தடை செய்து சர்க்கார் சாரதாசட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றிற்று.

தீண்டாமை பார்ப்பனியத்தால் ஏற்பட்ட பாதகம் என்று கூறினோம்; இது நடைமுறையில் இன்னும்சரிவரகையாளப்படவில்லை யென்றபோதிலும், தீண்டாமையை எந்த வடிவத்திலும் இனி நடமாட விடக்கூடாதென்று சட்டம் இயற்றப்பட்டுவிட்டது.

இவையெல்லாம்திராவிடர் கழகத்தாரால் இடைவிடாது செய்யப்பட்ட பிரசாரத்தின் பயனாக ஏற்பட்டவை என்பதை எவராவது மறுத்துக்கூற முடியுமா?

கோயில் நுழைவுச் சட்டம், திராவிடர்கழகத்தாரின் பிரசாரத்தாலும்

பட்டதென்று, இப்போது கவர்னர் ஜெனரலாக இருக்கும் இராஜகோபாலாச்சாரியார், ஒருசமயம், மதுரைக்குச்சென்றபோது, அங்குள்ள கோயில் நுழைவுச் சட்டத்தை எதிர்த்த பார்ப்பன நண்பர்களுக்கு விளக்கிக்கூறியிருக்கிறார். அன்பர் ஆச்சாரியார் இவ்வாறு கூறியது, ஒரு பார்ப்பனரே, பார்ப்பனருக்கு எதிராகக் கோயில் நுழைவுச் சட்டத்தைக்கொண்டுவரலாமா என்றுபார்ப்பன நண்பர்கள் கேட்டதற்குத், அதிலிருந்துதாம் தப்பித்துக்கொள்வதற்காகத் தந்திரமாகஇதைக்கூறினார்என்றாலும், திராவிடகழகத்தார் நாட்டுக்கு இன்றியமையாது செய்யப்படவேண்டிய கோயில் நுழைவு, பார்ப்பனருக்குமட்டும் ஏகபோக உரிமையாக இருப்பதா என்று பிரசாரம் செய்துவந்ததை அந்தச் சமயத்தில் ஒளிவுமறைவின்றிக் கூறினார் என்பதை, இன்று நம்மைப் பார்ப்பன விரோதிகள் என்று தவறாகக் கருதிக்கொண்டிருக்கும் தோழர் காளேஸ்வரராவ் போன்றாரின் ஞாபகத்திற்குக்கொண்டுவரவே இதனை இங்கு குறிப்பிடுகிறோம்.

பார்ப்பனியத்தின் அடிப்படைகளில் ஒன்றான இந்துமதபரிபாலனம், சீர்திருத்தி அமைக்கப்பட்டு, கோயில்களிலும் மடங்களிலும் நடைபெறும் அட்டூழியங்களும் ஆபாசங்களும் ஒழிக்கப்படவேண்டுமென்று இன்று கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா யாருடைய பிரசாரத்தின் விளைவு என்பதைச் சிறிது ஆரஅமர இருந்து யோசித்துப்பார்க்கும் எவருக்கும் உண்மையை மறைக்கும் தைரியம் அவ்வளவு எளிதில் உண்டாகிவிடாது.

இவையன்றி, சர்க்கார் உத்தியோகங்களுக்குப் பார்ப்பனரையேதேடித் தேடிப்பிடித்துக்கொண்டுவந்து சேர்ப்பதை நாம் கண்டிக்கிறோம். இதைச்சாக்காக வைத்துக்கொண்டு, சிலர், நாம் பார்ப்பனரைக் கண்டிக்கிறோம் என்று தவறாகக் கருதிக்கொண்டு நம்மீது பழி சுமத்திவிடுகிறார்கள். சர்க்கார் உத்தியோகங்களுக்குப் பார்ப்பனரைப் பார்க்கிலும் திறமையும் தகுதியும் வாய்ந்த பல பார்ப்பனரல்லாதார் இருக்கும்போது, அவர்களுக்கு அந்தப் பதவிகளைக்கொடுக்காமல், பார்ப்பனர்களின் எண்ணிக்கையின் அளவுக்கு அதிகமாக அவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களை வழங்கிச் சலுகைகாட்டுவது நீதியா? நேர்மையா? முறையா? என்று கேட்பதை எந்தச் சொந்த அறிவுடையவனாவது பார்ப்பன விரோதத்தால் செய்யப்படும் துவேஷம் என்று இதனைக் கூறமுடியுமா என்று கேட்கிறோம்.

நாம் பார்ப்பனரின் விரோதிகளல்ல, பார்ப்பனியத்தின் விரோதிகளே என்பதற்கு எண்ணற்றசான்றுகளை இதுவரை எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். பார்ப்பனியம் இந்நாட்டைவிட்டு ஒழிந்து, மக்களில் உயர்வு தாழ்வற்ற சமநிலையும், சகோதரப் பண்பும் ஏற்படும் வரையில் இனியும் நம்முடைய பிரசாரம் பார்ப்பனிய ஒழிப்பாகவேதான் இருக்குமேயன்றி ஒருபோதும்பார்ப்பன ஒழிப்பாக இருக்காதென்பதை, நம்முடைய பிரசாரத்தைத் தவறாக எண்ணி நம்மீது கணைதொடுக்கும் அன்பர்கள் தங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறோம்.

நாம் எந்தக்கட்சிக்கும் விரோதிகளல்ல, எந்த இனத்துக்கும் விரோதிகளல்ல என்பதை இன்னும் வலியுறுத்திக் கூறுகிறோம். எந்தக்கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும், அந்தக் கட்சி செய்யும் காரியங்கள் நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியனவாக இருக்கும்பட்சத்தில் அவைகளை நாம் எப்போதுமே வரவேற்றிருக்கிறோம்—வரவேற்போம். ஆனால்அதே கட்சி நாட்டுக்குத் தீங்குபயக்கும் காரியங்களைச் செய்ய முயலுமானால் அவற்றை நாம்கட்டாயம் எதிர்த்தே தீருவோம். இதனால் நம்மை ஒரு குறிப்பிட்ட கட்சியின் விரோதிகள் என்று கூறிவிட முடியுமா? நல்லது செய்வதை வரவேற்பதும், தீயது செய்வதை எதிர்ப்பதும் ஒரு கட்சியின் மீதுகொண்டுள்ள நட்பாலும் பகைமையாலும் ஏற்படுவதல்ல. நடுவுநிலைமை தாங்கிச்செய்யப்படும் செயல் என்றே இதனை விவேகிகள் கூறுவர்.

இதுபோலவேதான், எந்த ஒரு நல்ல காரியத்தையும் எந்த இனத்தவர் செய்தாலும் அதை நாம் வரவேற்போம்—பாராட்டுவோம். ஒரு நல்ல காரியம் ஆச்சாரியாரால் செய் செய்யப்பட்டாலும் சரி, அம்பேத்காரால் செய்யப்பட்டாலும் சரி அதனை நாம் ஒருபோதும் கண்டிக்க மாட்டோம். ஆச்சாரியார் செய்யக்கூடிய ஒரு கெட்ட காரியத்தை அம்பேத்கார் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போதும் நாம், அம்பேத்கார் ஒரு பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்துக்காக அவரை ஆதரிக்கமாட்டோம். அதுபோலவே அம்பேத்கார் செய்யவேண்டிய ஒரு நல்ல காரியத்தை ஆச்சாரியார் செய்தால், ஆச்சாரியார் ஒரு பார்ப்பனர் என்ற காரணத்துக்காக அவர்மீது பகைமை கொள்ள மாட்டோம் — பாராட்டுவோம். ஆகவே, நமக்கு, எந்த ஒரு தனிப்பட்ட கட்சியின் மீதோ, ஒரு இனத்தின் மீதோ காரணமின்றிப் பகைமை கொள்ளும் பண்பில்லை. அதுபோலவே காரணமின்றி நட்புரிமை பாராட்டி நயவஞ்சகம் புரியும் நாசவேலையிலும் நாம் ஈடுபடமாட்டோம். நமக்குக் கொள்கை பெரிதேயன்றிக் குரோதம் பெரிதல்ல. காரியம் பெரிதேயன்றி வீரியம் பெரிதல்ல, பேச்சைவிடச் செயலையே நாம் பெரிதாக மதிக்கிறோம். எனவேதான் பேசிப் பொழுது போக்குவதற்கன்றிப் பொதுமக்களின் நன்மையைக்கருதிச் செய்யப்படும் எந்த நல்ல காரியத்துக்கும் முட்டுக்கட்டையாக நிற்கும் இன்றைய சட்டசபைகளை எட்டியும் பார்க்கக் கூடாதென்று தொலைவில் நின்றுவேடிக்கை பார்க்கிறோம்-வேதனைப்படுகிறோம். கார்ட்டை அரையணாவிலிருந்து முக்காலணா ஆகவும், கவரை ஒன்றரை அணாவிலிருந்து இரண்டணாவாகவும் ஆக்கப்படும் காருண்யத்தையும், முதலாளிகளுக்கு இப்போதிருக்கும் வரியையே மேலும் குறைக்கும் பரோபகாரச் செயலையும் பார்த்துக்கொண்டிருக்கிறோம்—பரிதாபப்படுகிறோம். அழுகிப் போகும் பழத்துக்கும் வரி, அன்றாட உணவுப் பொருள்களுக்கும் புதுவரி போடும் புத்திசாலித்தனமான அரசியல நிர்வாகத் திறமையைக் காண்கிறோம்—கலங்குகிறோம்.

தோட்டிவேலை செய்யும் ஒரு தொழிலாளி தெருவில் போகிறான், அதே சமயத்தில் ஒரு பார்ப்பனனோ ஒரு பார்ப்பனமாதோ எதிரில் வருகிறார்கள்; தோட்டியைக் கண்டதும் அவர்கள் தவளைபோல் குதித்துத் தொலைவில் ஓடி ஒதுங்குவதையும் பார்க்கிறோம்—பரதவிக்கிறோம்—தீண்டாமை ஒழிப்புச் சட்டம் என்னத்தைச் சாதித்துவிட்டதென்று சஞ்சலப்படுகிறோம். முதலியார், ஐயரைப் பார்த்தவுடன், "அடியேன்

"சாமி தண்டம்" என்கிறார்; ஐயர் முதலியாரைப் பார்த்தவுடன், "ஏண்டா ஏகாம்பரம் சௌக்யமாக இருக்கிறாயா" என்று கேட்கிறார்; திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவன் இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் காண்கிறான்—கலங்குகிறான். இந்தப் பேதம் எப்போது ஒழியும் என்று ஏங்குகிறான்—பிரசாரத்தில ஈடுபடுகிறான். ஆனால் இது பிராமணத் துவேஷம் என்று தூற்றப்படுகிறது.

திருச்சி இரத்தினவேலு யார்? சட்டசபையில அவருடைய இடத்தில் இப்போதிருப்பவர் யார்? முத்துரங்கம் யார்? அவருடைய இடத்துக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நியமித்திருக்கும் ஆள் யார்? என்று திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவன் யோசிக்கிறான்—தமிழ் நாட்டில், தமிழர்கள் சட்டசபை உறுப்பினர்களாக இருந்த இடங்களுக்குக் கூடப் பார்ப்பனர்தான் வரவேண்டுமா? அதற்குத் தகுதியும் திறமையும் வாய்ந்த தமிழர்கள் அந்தத் தொகுதிகளில எவருமே இல்லையா? தேடியும் கிடைக்கவில்லையா? ஏன் பார்ப்பனரைத் தேடிப்பிடித்து நிறுத்தவேண்டும் என்று கேட்கிறான்—இதுநேர்மையா? முறையா என்று மனம் பதறி மக்களிடம் பிரசாரம் செய்கிறான். ஆனால், காமாலைக்காரனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் நிறமாய்த் தெரிவதுபோல, நமது காங்கிரஸ் அன்பர்களுக்குத் திராவிடர் கழகத்தார் செய்யும் எந்தக் காரியமும் பார்ப்பனர் மீது பகைமை கொண்டு செய்யப்படும் காரியமாகக் காட்சியளிக்கிறது!

"நூற்றுக்கு மூன்றுபேர்கூட இல்லாத பிராமணர்களைக் கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை" என்று 1—3—49-ல் தாம்பரத்தில் தோழர் காமராஜர் அவர்கள் பேசியிருக்கிறார். செங்கற்பட்டு மாவட்டக் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் போதுதான் இவ்விதம் பேசினார். செங்கற்பட்டுத் தொகுதிக்கு மேல்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தோழர் முத்துரங்கம் அவர்கள் காலமானதால், அவருடைய இடத்துக்கு டாக்டர் சீனுவாச ஐயரைத் தேர்தலுக்கு நிற்கும்படி நியமித்துவிட்டுத்தான்;

"நூற்றுக்கு மூன்று பேர் கூட இல்லாத பிராமணர்களைக் கண்டு நாம் பயப்படவேண்டியதில்லை" என்று மார்தட்டிப் பேசுகிறார். செங்கற்பட்டு மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த காமராஜருக்குத், தோழர் முத்துரங்கம் அவர்களுக்குப் பதிலாக ஒருபார்ப்பனரல்லாதார்கூட அகப்படவில்லையா? கட்சிப் பற்றுக் காமராஜருக்குக்குறைந்துள்ளதா என்னும், பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர் பலர் செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கின்றனரே! அவர்களில் ஒருவரை நியமித்திருக்கலாமே! ஏன் அவ்விதம்செய்யவில்லை—செய்யமுடியவில்லை காமராஜரால்? பார்ப்பனரிடம் பயம் கிடையாது என்று பரபரப்புடன் பேசும் காமராஜர் கண்களுக்கு ஒரு பார்ப்பனர்தானே தென்பட்டார்! இங்கு மட்டுமா? திருச்சியில் இரத்தினவேலு அவர்களுக்குப்பதிலாக அங்கும் ஒருபார்ப்பனர்தானே தென்பட்டார்! ஏன், தமிழ்நாட்டில் இனி யார் இறந்தாலும் அந்த இடத்துக்கு ஒருபார்ப்பனர்தான் வரவேண்டுமென்ற ஏற்பாடு ஏதாவது காங்கிரசில் இருக்கிறதா? பார்ப்பனரிடத்தில் நமக்குப் பயம் இல்லை யென்று பசப்புவதும், பின்னர் அவர்களைக் கண்டால் கைக்கட்டி, வாய்பொத்தி அடங்கி, ஒடுங்கி அவர்களுக்கே, நியாயம் நேர்மை அனைத்தையும்விட்டுச்சலுகை காட்டுவதும் எந்த ரகத்தைச்சேர்ந்த பேச்சென்று கேட்கிறோம்.

இதை நாம் கேட்டால், நம்மைப் பார்ப்பன விரோதிகள் என்று பச்சைப் பொய் பேசிப், பாமர மக்களை ஏமாற்றுகிறார்கள். தோழர் முத்துரங்க முதலியாரின் இடத்துக்கு டாக்டர் சீனுவாச ஐயர் என்பவர் வரலாமா என்று கேட்பதைப் பார்ப்பனர்மீது கொண்டுள்ள துவேஷத்தால்தான் இப்படிக் கேட்கிறார்கள் என்று சிறிதளவு அரசியலறிவுள்ளவனும் கூறமாட்டானே! ஆனால், காமராஜர்களும் காளேஸ்வரராவ்களும் கூறுகின்றனர் இவ்விதம்!

இந்த இலட்சணத்தில் 'கன்னடிய இராமசாமிக்குத் தமிழ் நாட்டில் என்ன வேலை' என்று விருதுநகரார் வீராப்புடன் கேட்கிறார், நந்தி கிராமத்துக் காளேஸ்வரராவ்கள் தமக்குத் துணையாக நிற்கிறார்கள் என்ற தைரியத்துடன்! "கன்னடிய நாய்க்கருக்குத் தமிழ் நாட்டில் என்ன வேலை" என்று கேட்கும் காமராஜரை "காஷ்மீர் நாட்டு நேருவுக்கும் பாம்பேய் பட்டேலுக்கும் தமிழ் நாட்டில் என்ன வேலை?" என்று நாம் கேட்டுவிட்டாலோ கோபம் கொதித்துக்கொண்டு கிளம்புகிறது காமராஜர்களுக்கு! வடநாடு தென்னாடு என்று பிரித்துப் பேசுகிறார்கள்—பிளவை உண்டாக்குகிறார்கள் என்று பிதற்றுகிறார்கள். "கன்னடிய நாய்க்கர் ஒருவர் வந்து தமிழ் மக்களின் உரிமைகளைக் காக்கவேண்டியதில்லை; தமிழர்களுக்குத் தெரியும் தங்கள் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ள" என்று பேரிரைச்சல் போடும் காமராஜர், தமிழ் மக்களின் உரிமைகளைக் காக்கப் பட்டேலும் நேருவும் பிறரும் வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரவேண்டுமென்று வாய் கூசாது கூறுகிறார்—தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறார்! கன்னட இராமசாமி, யார்? காஷ்மீர் நேரு, யார்? இதனை அறியச் சரித்திரமன்றோ படிக்கவேண்டும்! காமராஜருக்கு இது முடிகிற காரியமா? அவருக்கு எத்தனையோ தொல்லைகள்! பாவம், அவரால் இதையெல்லாம் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? செங்கற்பட்டில் ஒரு சீனுவாச அய்யர் அகப்படமாட்டாரா? திருச்சியில் ஒரு கோபால்சாமி அய்யர் அகப்படமாட்டாரா? அதன் மூலம் பார்ப்பனரல்லாதாருக்குக், கன்னட இராமசாமியால் செய்ய முடியாத நன்மைகளைச் செய்து 'நல்ல பேர்' வாங்கும் பணியினைச் செய்துகொண்டிருக்கும் போது வேறு பணியில் அவர் எப்படி ஈடுபட முடியும்?

தோழர் காமராஜர் அவர்கள், ஒருவகையில் பார்த்தால், அவர் உண்மையாகவே பிராமணர்களுக்குப் பயப்படத் தேவையில்லைத்தான். எப்படியென்றால், உண்மையாகவே பார்ப்பனரல்லாதார் வகிக்கவேண்டிய பதவியை அவர்களுக்கு வழங்காமல், பார்ப்பனர்களுக்கே கொடுக்கும்போது, அவர் ஏன் பார்ப்பனர்களுக்குப் பயப்படவேண்டும்? மாறாக அவர்களுடைய ஆசியும் அருளுமன்றோ அவருக்குக் கிடைக்கும்! ஆனால் பெரியார் இராமசாமியின் நிலை அப்படியல்லவே! அவர், பார்ப்பனரல்லாதாருக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பதவிகள்எல்லாம் பெரும்பாலும் பார்ப்பனருக்கே, முறையும் நேர்மையும் தவறிக் கொடுக்கப்படுகிறதென்றுகூறி அதற்காகப் பாடுபடுபவராயிற்றே! அவர் பார்ப்பனர்களுக்குப் [illegible]

டாலும், பார்ப்பனரின் பாதம் தாங்கிகளுக்குப் பயப்பட்டுத்தான் பார்ப்பனியத்தை ஒழிக்கும் பணியைச் செய்யவேண்டியிருக்கிறது. ஏனென்றால், பார்ப்பனிய ஒழிப்பு வேலை, இன்றைய பார்ப்பனப் பாதம் தாங்கிகளான பார்ப்பனரல்லாதாருக்கும் சேர்த்தே செய்யப்படுகிறது என்ற காரணத்தால்.

எனவே, நாம் பார்ப்பனருக்கு எதிரிகளல்ல. பார்ப்பனியத்துக்கே எதிரிகள் என்பதை இனிமேலாவது நம்மை நிந்திக்கும் அன்பர்கள் உணரவேண்டுகிறோம். இன்றில்லாவிட்டாலும் இன்னும் சில காலத்திலாவது, நாம் பார்ப்பன ஒழிப்பு வேலையில் ஈடுபட்டிருந்தோமா அல்லது பார்ப்பனிய ஒழிப்பு வேலையில் தான் ஈடுபட்டிருந்தோமா என்ற உண்மையை இப்போது நம்மை கடிந்துரைக்கும் அன்பர்கள் கட்டாயம் உணர்வார்கள் என்ற நம்பிக்கைமட்டும் நமக்கிருக்கிறது. நம்மால் செய்யப்பட்டுவரும் பார்ப்பனிய ஒழிப்பு வேலைகளில் சில, இப்போது நம்மைப் பார்ப்பன விரோதிகள் என்று கூறுபவர்களாலேகூட, அவர்களை அறியாமலேயே செய்யப்படும் நிலைமையை நம்முடைய பிரசாரம் உண்டாக்கிவிட்டிருப்பது மகிழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

●

கவியரசியின் மறைவு

நம் நாட்டுப் பெண்மணிகளின் பெருமைக்கும், புகழுக்கும், அறிவாற்றலுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியவர், காலஞ்சென்ற சரோஜினி அம்மையார் அவர்கள். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் மட்டுமன்றிச், சமுதாய இழிவுகளைப் போக்குவதிலும் அவர் பெரும் பங்கெடுத்துப் பணி புரிந்திருக்கிறார். பிறர் கையில் அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டை விடுதலை பெறச் செய்வதற்குமுன், சாதியின் பேரால் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிமைத் தளைகளையே முதலில் ஒடித்தெறிய வேண்டுமென்று கருதிய சரோஜினி அம்மையார் அவர்கள், தாமே கலப்பு மணம் செய்துகொண்டார்கள். 1898-ம் ஆண்டில், இப்பொழுது ஐதராபாத்தில் மேஜராக இருக்கும் தோழர் எம். ஜி. நாயுடு அவர்களைச் சென்னையில் மணஞ் செய்துகொண்டார். இன்றுபோலன்றி, அன்று கலப்புமணம் என்றாலே கடுநஞ்சாகக் கருதப்பட்டகாலம். பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டார் ஆகிய இருதரப்பில் இருந்துமே எதிர்ப்புக்கள் கிளம்பின. என்ற போதிலும் திருமணம் இனிது நடைபெற்றது.

1915-ல் தான் அவர் அரசியலில் கலந்து பணியாற்றத் தொடங்கினார். அன்று முதல் கடைசிவரை அவர் நாட்டின் விடுதலை ஒன்றிலேயே தமது நாட்டம் முழுவதையும் செலுத்திப், பலமுறை சிறை சென்றும் இன்னல்கள் பலவற்றுக்கு ஆளாகியும் தளராத உள்ளத்துடன் பணியாற்றி வந்தார்.

அவர் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய காலங்களில், காங்கிரஸ் தலைவியாகவும், காரியக் கமிட்டி உறுப்பினராகவும், ஆப்பிரிக்காவிற்கு இந்தியப் பிரதிநிதியாகவும், வட்டமேசை மாநாட்டுக்கு இந்தியப் பெண்களின் பிரதிநிதியாகவும், ஆசிய மாநாட்டுக்குத் தலைவியாகவும் இருந்து பணி புரிந்திருக்கிறார்.

அவருடைய ஒப்பற்ற நாட்டுப் பணியைப் பாராட்டும்முறையில் இந்திய சர்க்கார் அவரை ஐக்கிய மாகாணக் கவர்னராக்கினார்கள். கவர்னர் பதவியை ஏற்றுத் தம்முடைய கடமையைச் செய்துகொண்டிருக்கும்சமயத்தில், 2—3—49-ல் அவர் திடீரென்று மாரடைப்பு நோயால் காலமானார். இவருடைய மறைவு நாட்டுக்கு ஈடுசெய்யமுடியாத நட்டமாகும்.

மறைந்த சரோஜினி அம்மையார் அவர்கள் சமுதாயச் சீர்திருத்தப் பணி, நாட்டு விடுதலைப்பணி ஆகியவற்றில் மட்டுமே திறமை வாய்ந்தவரல்ல. அவருடைய கல்வியறிவின் திறமை அவரை உலகம் அறியும்படி செய்திருக்கிறது. அவருடைய கல்வித்திறமை, அவருடைய பதினோராவது வயதிலேயே கவி இயற்றக்கூடிய அளவுக்கு வளர்ச்சியடைந்திருந்தது. கருத்துக்கள் நிரம்பிய கவிகளை இயற்றுவதில் ஒப்பற்ற புலமையைப் பெற்றிருந்தார். அதனால் கவியரசி என்ற பட்டமும் அவருக்குக் கிடைத்தது. "பொன்வாசல்" "காலப்பறவை" "முறிந்த இறகு" ஆகிய நூல்கள் அவரால் இயற்றப்பெற்ற நூல்களில் சிறந்தவையாகும்.

அறிவுடைமை, அஞ்சாமை, ஆண்மை ஆகிய சிறந்த பண்புகளைக் கடைசிவரை கைவிடாமல் நாட்டுப் பணி புரிந்துவந்த அம்மையாரின் பெயர் சரித்திரத்தில் இடம்பெறக் கூடியதாகும்.

அவருடைய பிரிவால் வருந்தும் அவரது துணைவர் மேஜர் எம். கோவிந்தராஜுலு அவர்களுக்கும், அவருடைய புதல்வர்களுக்கும், நாட்டு மக்களுக்கும், நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுகிறோம்.

●

கவியரசர்

பாரதிதாசன்

நூற்கள்!

சேரதாண்டவம்
[வரலாற்று நாடகம்] விலை ரூ. 1—4—0

படித்த பெண்கள்
[உரைநடை நாடகம்] „ 1—4—0

காதலா? கடமையா?
[காப்பியம்] „ 1—4—4

கடல்மேற் குமிழிகள்
[காப்பியம்] அணா. 0—12—0

குடும்ப விளக்கு—திருமணம்
[3 வது பகுதி] 0—10—0

இசையமுது
[குறள் அடிக்குறிப்புடன்] 0—10—0

இருண்ட வீடு
[திருத்தப் பதிப்பு] 0—10—0

ஏற்றப்பாட்டு, திராவிட திருப்பாடல், நல்லமுத்துக் கதை, இந்தி எதிர்ப்புப் பாட்டு,
[எளியநடைப் பாடல்கள்]
தனித்தனி விலை அணா 0—4—0

பாரதிதாசன் ஆத்திசூடி 0—2—0

விற்பனைக் கழிவு உண்டு

அமைச்சர்:—

பாரதிதாசன் பதிப்பகம்
புதுச்சேரி.

வேதகாலக் கடவுள்

௫-ம் பக்கத் தொடர்ச்சி

7. சிவனுடைய புதல்வர்களில்ஒருவரான முருகக்கடவுளின் தேருக்கு ஒருகோழிக்கொடி தேவைப்பட்டது. அந்தச் சமயம் இந்த அக்னிபகவான் அத்தேரின் கோழிக் கொடியாக மாறிச் சுப்பிரமணியக் கடவுளுக்குப் பணிபுரிந்தான். எல்லாம் வல்ல கடவுள் கேவலம் ஒரு தேரில் பறக்கும் கொடியாக மாறிவிட்டாரே என்ற வெட்கமும் துக்கமும் வேதகாலத்தவருக்கு ஏற்பட்டு, அவரைக் கடவுட் பதவியினின்றும் இறக்கியிருக்கலாம்.

8. சந்தனு என்ற அரசன் காலத்தில் விசுவாமித்திரர் ஒரு வேள்வி செய்தார். அந்த வேள்விக்கு அக்னி பகவானும் போயிருந்தார். விசுவாமித்திரர் அவருக்கு யாதுகாரணத்தாலோ, நாய் இறைச்சியை உண்ணும்படி கொடுத்தார். அந்தக் கோபத்தால் அக்னி ஒரு மூங்கிலில் ஒளித்துக்கொண்டார். அவர் மூங்கிலில் ஒளிந்துகொண்டிருப்பதை ஒரு யானை தேவர்களிடம் சொல்லிற்று. தான் இருக்கும் இடத்தைச் சொன்ன காரணத்துக்காக யானைக்குக் கொம்புகள் இல்லாமல் போகக் கடவது என்று சாபமிட்டுவிட்டு, அக்னிபகவான் ஒரு அரசமரத்தில் போய்ஒளிந்து கொண்டார். அதனை அந்த அரசமரத்தில் இருந்த ஒருகிளி தேவர்களிடம் சொல்லிற்று. தன்னுடைய இருப்பிடத்தைக் கிளி அறிவித்துவிட்டதே என்று சினங்கொண்ட அக்னிபகவான், அதற்கு பேசும் ஆற்றல் இல்லாமல் போகக் கடவது என்று சாபமிட்டார். இவ்வாறு சாபமிடுவதையே தொழிலாகக் கொண்ட ஒருவரைக் கடவுளாக வைத்துக்கொண்டிருந்தால், ஆபத்து மேலும் மேலும் வளரும் என்று அஞ்சி அவரைக் கடவுட் பதவியினின்றும் நீக்கியிருக்கலாம்.

9. ஒரு சமயம், பரமசிவனும் பார்வதியம்மனும் தனியிடத்தில் சிற்றின்ப நுகர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது இந்த அக்னிபகவான் ஒரு புறாவின் வடிவெடுத்து அங்குசென்றார். அதையறிந்த பார்வதி அம்மையார், அக்னிபகவானை நோக்கி, "நீ எங்களுடைய சிற்றின்ப நுகர்ச்சிக்கு இடையூறு செய்தபடியால், இந்தப் புறா வடிவத்துடனேயே இருந்து கல்லைத் தின்று, சகோரம் என்ற மலையைப் புணரக் கடவாய்" என்று சாபமிட்டாள். கடவுளாக இருந்த அக்னிபகவான் செல்லத் தகாத இடத்துக்குச் சென்றதுமன்றி, புறாவின் வடிவில் இருந்து கல்லைத் தின்று, மலையைப் புணரும் சாபத்தைப் பெற்ற காரணத்தால் கடவுள் வேலை பறிபோயிருக்கலாம்.

10. பிரம்மாவின் மானச புதல்வர்களில் ஒருவரான பிருகுமாமுனிவரின் மனைவி புலோமசை என்பாள் கர்ப்பமாயிருந்தாள். பிருகுமுனிவர், தம்முடைய மனைவியின் கர்ப்பத்தை முன்னிட்டு ஒரு வேள்வி செய்ய எண்ணி அக்னியை உண்டாக்கிவிட்டு நீராடச் சென்றுவிட்டார். புலோமசை தனித்திருப்பதை அறிந்த புலோமன் என்னும் ஒரு அரக்கன் அங்குசென்று புலோமசையைத் தூக்கிக்கொண்டு போயினன். புலோமசையின் அபயக்குரலைக்கேட்டுக்கொண்டுஅவளுடையகர்ப்பத்தில் இருந்த சியவனன் என்ற அவளுடைய புதல்வன் உடனே வெளியே வந்து அந்த அரக்கனைச் சாம்பலாக எரித்துவிட்டான். இதனை யோகவல்லமையால் அறிந்தபிருகுமாமுனிவர் உடனே அங்கு தோன்றி, அக்னிபகவானை நோக்கி, "நீஎனது மனைவியை இந்த அரக்கன் தூக்கிக்கொண்டு போவதைக்கண்டும் தடைசெய்யாமல் இருந்ததால், மலத்தைத் தின்னக் கடவது" என்று சாபமிட்டார். மலத்தைத் தின்னும் ஒருவரை மகேசுவரனாக வைத்திருப்பது மானக்கேடு என்று கருதி ஒதுக்கி இருக்கலாம்.

11. அக்னிபகவானுக்கு மனைவியாக இருந்த சுவாகாதேவி என்பாள் உண்மையாகவே அக்னியுடைய மனைவியல்ல. தக்கனுடைய புதல்வியாகிய இவளை இயமன் முதலில் காதல் மணம் செய்திருந்தான். இயமன் இவளை எலுமிச்சம்பழமாக்கி விழுங்கிக்கொள்வதும், வேண்டும்போது வெளிப்படுத்தி அவளுடன் விளையாடுவதுமாக இருந்தான். இப்படியிருக்கையில் ஒருமுறை ஒரு நந்தவனத்தில் இவளுடன் விளையாடி, இளைப்பு மிகுதியால் அயர்ந்து நித்திரை போய்விட்டான். அந்தச் சமயத்தில் அக்னிபகவான் அவ்வழிவர, அவரைக்கண்டு, சுவாகாதேவி காதல் கொண்டு அவருடன் கூடி இன்பம் நுகர்ந்து, அவரை ஒரு பழமாக்கி விழுங்கிக்கொண்டாள். நித்திரையிலிருந்து விழித்துக்கொண்ட இயமன் சுவாகாதேவியை எலுமிச்சம் பழமாக்கி விழுங்கிக்கொண்டான். இந்தச்சமயத்தில் அகில உலகிலும் அக்னிபகவான் இல்லாமற்போகவே, தேவர்கள் திருமாலிடம் முறையிட்டார்கள். திருமால் தம்முடைய திருவருள் மருத்துவத்தால் அக்னிபகவான் இருக்கும் இடத்தை அறிந்துகொண்டார். அதாவது, இயமனுடைய மனைவியான சுவாகாதேவி என்பாள் அக்னிபகவானை ஒரு பழமாக்கித் தன்னுடைய வயிற்றுக்குள் வைத்திருப்பதையும், சுவாகாதேவியை இயமன் ஒரு எலுமிச்சம் பழமாக்கித் தன்னுடைய வயிற்றுக்குள் வைத்திருப்பதையும் திருமால் தெரிந்துகொண்டார். இன்னும் விளக்கமாக்கச் சொல்லவேண்டுமானால்,இயமன் தன்னுடைய காதலியான சுவாகாதேவியை ஒரு எலுமிச்சம் பழமாக்குகிறான். எலுமிச்சம் பழமாய் மாறியிருக்கும் சுவாகாதேவி தன்னுடைய ஆசைநாயகனான அக்னி பகவானை ஒரு பழமாக்கித் தன்னுடைய வயிற்றுக்குள் வைத்துக் கொள்கிறாள். பின்னர் இயமன், அக்னிபகவானைப் பழமாக்கித் தன்னுடைய வயிற்றுக்குள் மறைத்து வைத்திருக்கும் சுவாகாதேவியை எலுமிச்சம் பழமாக்கி விழுங்கிக் கொள்கிறான். அதாவது இயமனால் எலுமிச்சம்பழமாக்கி விழுங்கப்பட்ட சுவாகா தேவியின் வயிற்றுக்குள் அக்னிபகவான் ஒரு பழமாக வீற்றிருக்கிறார். இன்னும் விளக்கம் வேண்டுமா? சுவாகாதேவி என்ற எலுமிச்சம் பழத்திற்குள் அக்னிபகவான் என்ற இன்னொரு பழமும் இருக்கிறது. இயமன், சுவாகாதேவியை எலுமிச்சம் பழமாக்கும்போது, சுவாகாவால் பழமாக்கப்பட்ட அக்னி பகவானும் அந்த எலுமிச்சம் பழத்துக்குள் அடங்கி இயமனுடைய வயிற்றுக்குள் போய்விடுகிறார். இப்போது இயமனுடைய வயிற்றுக்குள் சுவாகாதேவியும் (எலுமிச்சம்பழமும்) அவளுடைய வயிற்றுக்குள் (எலுமிச்சம்பழத்துக்குள்) அக்னி பகவானும் (இன்னொருபழமும்) இருக்கின்றனர். இயமனுடைய வயிற்றுக்குள் இருக்கும் சுவாகாதேவியும் அக்னிபகவானும் தங்கள் இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சரியான இடம் (இயமனுடைய வயிறு) கிடைத்து விட்டதே என்ற மகிழ்ச்சிப் பெருக்கோடு காதல் விளையாட்டு நடத்திக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சமயத்தில்தான் உலக

ளந்த பெருமாளாகிய திருமால் அக்னிபகவான் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கிறார். உடனே இயமனிடம் சென்று, அவனுடைய வயிற்றுக்குள் இருக்கும் எலுமிச்சம் பழத்தை வெளிப்படுத்தி, அதனைச் சுவாகாதேவியாகும்படி அருள்பாலித்து, அவளுடையவயிற்றுக்குள் இருக்கும் பழத்தை வெளிப்படுத்தி, அதனை அக்னிபகவானாகும்படி கிருபா கடாட்சம் புரிந்து, பின்னர் சிரஞ்சீவி அக்னிபகவானுக்கும்—சௌபாக்கியவதி சுவாகாதேவிக்கும் நல்ல சுபயோக சுபதினத்தில் பாணிக்கிரஹணம் நடைபெறுகிறது.

வேதகால முதற்கடவுளாகிய அக்னிபகவானுடைய திருவிளையாடல்களா இவை என்று ஆச்சரியப்படுகிறீர்களா? இவை எல்லாம் வேதகாலமாகிய மிகமிகப் பழையகாலத்தில் பகவான் அருளைப்பெற்ற தவசிரேஷ்டர்களான முனிபுங்கவர்களால் திருவாய்மலர்ந்தருளி எழுதப்பட்ட புண்ணிய நூல்களான தேவி பாகவதம், பிரம்மகைவர்த்தம், சிவமகா புராணம், வேதப் பொருள் விளக்கம், பராசஸ்மிருதி, பாரதம், இராமாயணம், சிவரகசியம், பாடலவனபுராணம், கந்தபுராணம், காஞ்சி புராணம், காசிகாண்டம் முதலிய வேதாகம இதிகாச புராணங்களில் காணப்படும் உண்மைகளாகும். நாம் மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிகளில் ஒன்றுகூட நாமாக இட்டுக்கட்டிக் கூறுபவை அல்ல. எல்லாம் வேத வேதாந்தங்களின் உட்பொருளை உணர்ந்த 'உத்தமர்' களால் உரைக்கப்பட்ட அருள் வாக்குகளாகும்.

எனவே, இப்போதில்லாததும், வேதகாலத்தில் இருந்ததுமான ஒரு கடவுளைப்பற்றி இப்போது ஆராய வேண்டிய இன்றியமையாமை என்ன என்று சிலர் கேட்கலாம். வேதகாலத்துக் கடவுளான அக்னி பகவானுக்கு இப்போது தனியாகக் கோயிலும் திருவிழாக்களும் இல்லையென்ற போதிலும், இந்த அக்னிபகவானை வழிபடும் வழக்கம் இன்றும் நாம் நாட்டில் இருக்கிறது. அக்னிபகவானை முன்னிலையில் வைத்துத் தானே நமது வைதிக அன்பர்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களை நடத்துகிறார்கள். வைதிக முறைப்படி செய்யப்படும் நல்ல—கெட்ட காரியங்களிலெல்லாம் இந்த அக்னி பகவான்தான் முதலிடம் பெறுகிறார்.

அக்னி முன்னிலையில் திருமணம் செய்துகொள்ளும் ஒரு ஆணும் பெண்ணும், பல பேரைப் புணர்ந்தவனும், அங்ஙனம் புணர்வதற்குத் தன் மனைவியையே உதவிசெய்யும்படி கேட்டவனும், பிறர் மனைவிமீது இச்சைகொண்டு அவள் தொடையில் ஒளிந்திருந்தவனும், குரங்கு வடிவாக மாறினவனும், நாய் இறைச்சியைத் தின்றவனும், மலத்தைப் புசித்தவனும், சிற்றின்ப நுகர்ச்சியில் ஈடுபட்டிருந்த சிவனுடைய அந்தப்புரத்துக்குப் புறா வடிவெடுத்துச் சென்று பார்த்தவனும், இன்னும் இவைபோன்ற பல ஆபாசக்ளஞ்சிங்களுக்கு இருப்பிடமானவனுமான இவன் நம்முடைய திருமணத்தில் வந்து ஏன் முன்னிற்க வேண்டும் என்பதை இனியாவது யோசித்துப் பார்க்கவேண்டுமெண்பதற்காகவே இதனை இப்போது எழுதுகிறோம்.

இனி, நம்நாட்டில் நடைபெறும் வைதிகத் திருமணங்களில் அருந்ததியைப்பார்ப்பது என்ற ஒரு வழக்கமும் இருக்கிறதல்லவா! இந்த ஏற்பாடு யாரால் முதலில் செய்யப்பட்டதென்பது பலருக்குத் தெரியாது. ஏதோ அக்னி முன்னிலையில் அருந்ததி சாட்சியாகத் திருமணம் நடைபெற்றது என்ற அளவோடுதான் முடிந்து விடுகிறது. திருமண காலத்தில் அருந்ததியை ஏன்பார்க்க வேண்டும்? இந்த ஏற்பாடு எப்படி உண்டாயிற்று? என்பன போன்ற விளக்கங்களை அறியவும், அப்படிப் பார்ப்பதனால் உண்டாகும் நன்மை என்ன என்பதை உணரவும் இவர்கள் விரும்புவதில்லை.

சப்தரிஷிகளின் மனைவிமார்களைச் சேர்ந்து இன்புறவேண்டுமென்று கரைகடந்த காம இச்சைகொண்ட அக்னிபகவான் தன்னுடைய மனைவியானசுவாகாதேவியின் உதவியால், அருந்ததியொழிந்தமற்ற ஆறுபெண்களின் வடிவங்களையும் பெற்று இன்பம் நுகர்ந்தான். அருந்ததியின் வடிவத்தைச் சுவாகாதேவியால் எடுக்க முடியாதுபோகவே, சுவாகாதேவி அருந்ததியிடம்சென்று 'என்னுடைய கணவரின் இச்சையை நிறைவேற்றி வைக்க முயன்ற என்னால் உன்னுடைய வடிவத்தைக் கொள்ள முடியவில்லை. நீ மிகப் பெரியவள்—கற்புக்கரசி. எனவே உலகத்திலே நடைபெறும் திருமணகாலங்களில், எந்தப் பெண், அக்னி பிரமாண பந்து மித்ர சந்நிதியில் உன்னை நினைத்துத் தரிசிப்பாளோ, அவள் சுகம், தனம், புத்திரப் பேறுடையவாளாகி உன்னைப் போலக் கீர்த்தியடைந்து புண்ணியலோகத்தை அடையக்கடவது" என்று வரமளித்தாள் என்பதாகச் சிவமகா புராணம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இதனை ஆதாரமாக வைத்துத்தான் இப்போது நடைபெறும் வைதிகத் திருமணங்களில் அருந்ததியைப் பார்க்கிறார்கள்.

ஆனால், இந்த அருந்ததியைப் பார்க்கும் ஏற்பாட்டை உண்டாக்கிய சுவாகாதேவி, யார்? எப்படிப்பட்டவள்? என்பது பலருக்குத் தெரியாது. எனவேதான் இந்தச் சுவாகாதேவி முதலில் இயமனுக்கு மனைவியாய் இருந்தவள் என்றும், இயமன் இவளை ஒரு எலுமிச்சம்பழமாக்கித் தன்னுடைய வயிற்றுக்குள் வைத்திருந்தான் என்றும், பின்னர் இவள் அக்னியைக் கண்டு காதல் கொண்டு அவனை ஒரு பழமாக்கித் தன்னுடைய வயிறுக்குள் வைத்திருந்த புண்ணியவதி என்றும் விளக்கி உண்மையை உலக மக்களுக்கு உணர்த்தவுமே இதனை இப்போது எழுதுகிறோம்.

அதோடு, 'தினசரி மடல்' குறிப்பிடுவதுபோல், வேதகாலத்துக் கடவுளான அக்னிபகவான் இப்போது ஏதோ ஒரு சிறு தேவதையாக மாறி எங்கோ ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டிருப்பது போலவே, இக்காலத்தில் முக்கியமான கடவுளராக நம்மால் வழிபடப்படும் கடவுளரும் இனி வருங்காலத்தில் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடக் கூடும் என்றும், அதற்காகப் பெரும் பெருங்கோயில்களும், மடங்களும் அங்கெல்லாம் குவித்து வைக்கப்பட்டுக் கிடக்கும் கோடிக் கணக்கான பொருள்களும் வேறு நல்ல வகையில் பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் கூறுகின்றோம்.

இப்போது சென்னை சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும்இந்துமத பரிபாலனத் திருத்த மசோதா இந்த வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

இயமன் சுவாகா தேவியை எலுமிச்சம் பழமாக மாற்றி மறைத்து வைத்திருந்ததைப் போல் இன்றைய மடாதிபதிகள் நடந்து கொள்வதற்குக் கோயில்களிலும் மடங்களிலும்

(அடுத்த பக்கம் பார்க்க)

மலாடோவ் வரலாறு

★

நல்ல திடகாத்திரமான ஒரு மனிதன். அவன்தலையில் ஒரு மிருதுவான குல்லாயிருந்தது. முழங்கால் வரை நீண்டகோட் ஒன்றும் தரித்திருந்தான்.

அவன் தனக்கு எதிரில் நின்றுகொண்டிருந்த ஒரு சிறுவனைச் சந்தேகத்தோடு கவனித்துக்கொண்டிருந்தான். சிறுவன் சஞ்சலமுடன் நின்றுகொண்டிருந்தான்.

சிறுவனுக்கு வயது 15 அல்லது 16 தானிருக்கும். ஒல்லியான உடற்கட்டு உடையவன். தலைமட்டும் சற்றுப் பெரிது. கண்ணாடி போட்டிருந்தான். அதற்குப் பின்னாலிருந்த கண்களிரண்டும் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவன் காலேஜில் படிக்கும் மாணவனைப்போல் ஆடையணிந்திருந்தான்.

சிறுவனைப் உற்றுக்கவனித்த வாசல் காப்பவன் சொன்னான்—'இவ் வாலிபர் கூட இதில் சேர வந்துவிட்டாரே' என்று.

பிறகு சிறுவன் அழைத்துச் செல்லப் பட்டான். படிக்கட்டுகளையும் பலசுவர்களையும் அவர்கள் கடந்து சென்றனர். இரகசியமாய்ச் சந்திக்க வேண்டிய தனியறை வந்துவிட்டது.

அந்த அறையில்தான், நவீன ருஷ்யாவைச்சிருஷ்டிக்க, ஜார் மன்னருக்கு எதிராய்ச் சதிசெய்யும் மனிதர்கள் இருந்தார்கள். இவர்களைத் தான் அவ்வாலிபன் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்தசந்திப்புச் சுமார் 43-ஆண்டுகளுக்கு முன்னால், 1906-ம் ஆண்டு நவம்பர் மாதம் செயின்ட் பீற்றர்ஸ் பார்க்கில் நடந்தது. அப்போது புரட்சிக் கூட்டம் உலகத்தையே திடுக்கிடவைக்கும் ஒரியக்கத்தை வளர்த்துக் கொண்டிருந்தது.

"இதோ ஸ்கிரியாபின் வந்திருக்கிறார்" என்றுஅந்தத்திடகாத்திரமான வாசல் காப்பவன், கதவைத் தள்ளிக் கொண்டே அறிவித்தான்.

அந்த அறையில் சுமார் பத்துப் பேர், பெட்டிகள் மீதும் மூட்டை முடிச்சுகள் மீதும் வீற்றிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் ஒரு மேஜை இருந்தது. அதன் மீது 4 மெழுகுவத்திகள் எரிந்துகொண்டிருந்தன. அவ்வெளிச்சத்தில் தாடி வளர்த்த முகங்களுடன் கூடிய பரட்டைத் தலைகள் பல தெரிந்தன. புதிதாக வந்த வாலிபனை அத்தனை முகங்களும் நோக்கின.

"ஸ்கிரியாபினா? தெரியாதே நீ யாரப்பா?"

"நான் ஒரு மாணவன்"

"உன்னை இங்கே அனுப்பியது யார்?"

"யாருமில்லை. நான் புரட்சிக் கொள்கையுடையவன்"

இரகசியப் போலீசார் தங்களைப் பிடிப்பதற்காகச் சகல தந்திரங்களையும் செய்து வருகிறார்கள் என்ற விஷயம் இச்சதிகாரர்கள் அனைவருக்குந் தெரியும். ஆதலின் வாலிபனை அவர்கள் பலவித சோதனைகளுக்கு உள்ளாக்கினார்கள்.

"துரோகிக்கு எந்தக் கதி ஏற்படுமென்று உனக்குத் தெரியுமல்லவா?" என்று அந்தக் கூட்டத்துக்குத் தலைமையாயிருந்தவன் கேட்டான். அவனுடைய ஆள்காட்டி விரல் மேஜை மீது கிடந்த கைத்துப்பாக்கிகளைக் காட்டிற்று.

"நான் உங்களைக் காட்டிக்கொடுத்தால் என்னைக் கொன்று விடுங்கள்!"

"சரி. பிரமாணம் எடுத்துக் கொள்"

அது முதல் வியாசெஸ் லாவ்மிக்கெய்லோவிட்ச் ஸ்கிரியாபின் என்ற அவ்வாலிபன் அக்கூட்டத்திலே சேர்ந்துவிட்டான். அதே வாலிபன் தான் இப்போது நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பு, 'அங்கி' என அர்த்தப்படும் 'மலாடோவ்' என்ற புனை பெயருடன் ருஷ்ய நாட்டின் 2-வது தலைவராய்த் திகழ்கின்றார்!

மலாடோவ் 1890-ம் ஆண்டில், வியாட்கா மகாணத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவர். அவருடைய தந்தை மிக்கெயில் ஸ்கிரியாபின் ஒரு குமஸ்தாவாயிருந்தார். நல்ல கனவான். அவருக்கிருந்தமனக் கவலையெல்லாம் தன்னுடைய பிள்ளைகளில் வியாசெஸ்லால் தன்னைக் காட்டினும் நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்பதுதான்.

பள்ளியில் நன்றாகக் கல்வி கற்றார். நல்ல சாதுரியமும், ஞாபகசக்தியும் அவருக்குண்டு. காலேஜில் அவர் கடைசி வருஷம் படித்துக்கொண்டிருந்தபோது அவருடைய கைக்குள்

(அடுத்த பக்கம் பார்க்க)

வேதகாலக் கடவுள்

முன்பக்கத் தொடர்ச்சி

முடங்கிக் கிடக்கும் பணம் பாழாகக் கூடாதென்று கூறுகின்றோம்.

எனவே, 'தினசரி மடல்' குறிப்பிடுவதுபோல், வேதகாலத்துக் கடவுளான அக்னிபகவான் இப்போது இங்கிலாந்திலுள்ள கண் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருப்பது போலவே, இன்றுள்ள நமது பற்பல கடவுளரும் இனி வருங்காலத்தில், பல்வேறு நாடுகளிலுள்ள கண்காட்சிச் சாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டிய அருவருப்பான ஆனால் ஆச்சரியப்படக்கூடிய வடிவங்களாக அமைந்திருப்பதால், அவைகளுக்காகப் பொதுப் பணத்தைப் பாழாக்கக் கூடாதென்றும், அறிவை முன்னிலைப்படுத்தி வழிபடக்கூடிய ஒரு பொதுக் கடவுளை—வடிவம் எதுவும் கற்பியாமல்—அதற்காகப் பணச் செலவு எதுவும் ஏற்படாமல் உள்ள ஒரு கடவுளை எவரும் எப்போதும் வழிபடலாம் என்றும் கூறுகின்றோம்.

❋

ஒரு திருத்தம்

20-2-49-ல் வெளிவந்த "திராவிட நாடு" இதழில் 9-வது பக்கத்தில், கே. டி. கோசல்ராம் M. L. A. அவர்கள் பேசியதாகக் குறிப்பிடும் பகுதியில், "இனி நாங்களும் பார்ப்பனர் கொண்டு வரும் சட்டத்தை உடைத்துத் தகர்க்கவே தீர்மானித்துள்ளோம்" என்றிருப்பதை,

"மக்களைச் சுரண்டுவதற்காக ஏற்கெனவே ஏற்படுத்தியிருக்கும் சட்டங்களையும், இனி அவ்விதம் ஏற்படுத்தினால் அந்தச் சட்டங்களையும் உடைத்தெறிவது தான் பொதுமக்களின் ஓட்டைப்பெற்று வந்த எங்கள் போன்ற சட்டசபையினரின் வேலை என்று தீர்மானித்துள்ளோம்"

என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும். (ஆ.ர்)

படித்து வைத்திருந்த ஒரு கடிதத்தை யாரோ திணித்தான்—அக் கடிதம் அப்போது எங்கும் பரவிக் கொண்டிருந்த புரட்சித் துண்டுப் பிரசுரம்!

அதுமுதல் இரகசியக் கூட்டங்களுக்கு, விஜயம் செய்யலானார். சர்க்காரால் விலக்கப்பட்டிருந்த புத்தகங்களைவாங்கிப் படித்தார். புரட்சியைக் கிளப்புவர்களுடைய விபரங்களைக் தெரிந்துகொண்டு, சிநேகம்கொள்ள ஆரம்பித்தார்.

அந்த 1906-ம் ஆண்டு செப்டம்பர் மாத மாலையில், யாரோ ஒருவர் புரட்சிக்காரர்கள் கூடுகிற ஒரு பழைய கட்டிடத்தின் விலாசத்தைக் கொடுத்தார். அதை அவர் ஒரு பெரிய பாக்கியமென்று கருதி மகிழ்ந்தார்.

ஆனால் பிரமாணம் எடுத்துக் கொண்டது ஸ்கிரியாபின் அல்ல. மலாடோவ் தன்னுடைய தந்தை தன்னைப் பற்றி எண்ணியிருந்த கோட்டைகளையெல்லாம் அதே க்ஷணத்தில் இடித்துத் தள்ளினார். தன் பெயரையும் மாற்றிக்கொண்டார். அன்றுமுதல் தீவிரமான ஒரு புரட்சிக்காரராய் மாறிவிட்டார். துண்டுப் பிரசுரங்களைத் தாராளமாய் வழங்கினார். தன் தோழர்களிடமும் புரட்சிப் பிரசாரப் பேச்சுகளை நடத்தி வந்தார்.

1909-ம் வருஷம் புரட்சிக்காரர்கள் ஆதரவில் நடந்த ஒரு கூட்டத்தை விட்டு வரும்போது, அவர் இரகசியப் போலீசாரால் கைது செய்யப்பட்டு 2 வருடச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். சிறைத் தண்டனையையனுபவித்து வெளியில் வரும் போது அவருக்கு வயது 19தான்!

எனினும் சிறைவாசத்தால் மலாடோவுக்கு ஊக்கம் குறையவில்லை. சில நாட்களுக்குப் பின், இப்போது லெனின் கிராட் என வழங்கப்படும் செயிண்ட் பீற்றர்ஸ்பார்க்குக்குத் திரும்பினார். அங்கு மும்முரமான போல்ஷ்விஸ்டாகத் தீவிரமான பல காரியங்களைச் செய்து வந்தார். அத்துடன் சர்வகலாசாலையிலும்பயின்று வந்தார். தவிர, இராக்காலங்களில் தடை விதிக்கப்பட்டிருந்த **பிரவதா, சுவேஸ்டா** ஆகிய பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு வந்த கூட்டத்தில் வேலை செய்துவந்தார். அவரே கட்டுரைகள் எழுதுவார், கம்போஸ் செய்வார், கை இயந்திரத்தில் சுற்றி அச்சடிப்பார்!

அவருடைய வாழ்க்கை எப்படி நடந்துவந்தது? மிக ஒல்லியான சரீரத்தையுடையவர் அவர், ஆனால் அவருடைய நீல நிறக் கண்கள் கண்ணாடிக்குள் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

போலீசார் அடிக்கடி தொந்தரவு கொடுப்பார்கள். மலாடோவ் ஒவ்வொரு சமயமும் தப்பித்துக் கொள்வார். பிறகு 1911-ல் ஆரம்பித்த இரகசியமான சூழ்ச்சிக் காரியங்களையெல்லாம் விட்டு, ஈரம் நிறைந்த அறைகளிலே மெழுகுவத்தி வெளிச்சத்திலே ஏதேனும் வேலை செய்து கொண்டிருப்பார்.

1912 ஜூன் மாதத்தில் மலாடோவ் மீண்டும் கைதியானார். ஆனால் சிறையில் காவல் காத்துக் கொண்டிருந்தவனைத் தாக்கி வெளியிலே வந்துவிட்டார். 3 ஆண்டுகளாய் எல்லா இரகசியப் போலீசாரும் அவரைத் தேடி யலைந்தார்கள். ஆனால் பிடிக்க முடியவில்லை. மலாடோவிடமிருந்த ஒரு பெரிய சாதுரியம் என்னவென்றால் துரோகிகள் சூழ்ச்சிக்கும் இரகசியப் போலீஸார் கைக்கும் அவர் அகப்படவே மாட்டார்.

அவர் அடிக்கடி தம்முடைய இருப்பிடத்தை மாற்றிக்கொண்டேயிருப்பார். சில வேளைகளில் மேல் மாடியிலே குடியிருப்பார். சிலவேளைகளில் அடித்தளத்திலே வசிப்பார். என்றாலும் கடைசியில் 1916-ம் ஆண்டில் அவர் பிடிக்கப்பட்டு சைபேரியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டு விட்டார். அங்கு இர்குட்ஸ்கில் பல சுரங்கங்களில் மாதக் கணக்காய் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போதும் அவருடைய புரட்சிப் பிரசாரத்தை அவர் விடவில்லை. ஒரு நாள் மாலை, ஆஜர் ஜாப்தாவைப் படிக்கும்போது காவலாளர்கள் மலாடோவ் மறைந்து விட்டதாக அறிவித்தார்கள்!

செயிண்ட் பீற்றர்ஸ் பார்க்கில் அவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமயம் மலாடோவ் லண்டனில் தன் நண்பர் ஸ்டாலினுடன் இருந்தார். ஸ்டாலின் மலாடோவை விட 10 வயது மூத்தவர். அங்கே ஒரு கட்சி மாநாட்டில் இவர்கள் கலந்து கொண்டார்கள். லெனினும் மலாடோவும் முதல் முதலாக ஒரு கோவிலில் நடந்த இரகசியக் கூட்டத்திலேதான் சந்தித்துக் கொண்டனர்.

அவசர ஓலை—அனுப்பவில்லை!!

பிரதம மந்திரியாரே!

நாம் மகிழ்ச்சியுடன், நமது ஆசியையும் சிவானுக்கிரகத்தையும் கலந்து, தங்கள் ஆட்சிப்பீடம் ஏறின சுபதினத்தன்று, செம்பொன்னால் செய்த, அருமையான வேலைப்பாடமைந்த செங்கோலை, அனுப்பி வைத்தோம்.

செங்கோலை ஏற்றுக்கொண்டது கண்டு நாம் சித்தம் களித்தோம்.

தங்கள் ஆட்சியின்போது, நமது செங்கோலுக்கு எவ்வித ஆபத்தும் வராது என்று நம்பினோம்.

ஆனால் இப்போது சென்னை ஆட்சியாளர்கள், மடாலய ராஜ்யத்திலே பிரவேசித்து, நமது புனிதத் தன்மையையும், பாத்யதையையும் பாழ்படுத்தத் துணிந்துவிட்டார்கள்.

நம்மிடமும் நமது புனித மார்க்கத்திடமும் மதிப்புள்ள சில பிரமுகர்கள் எவ்வளவோ எடுத்துரைத்தும் கேட்கவில்லை, சென்னை அரசினர்.

உடனே, தாங்கள் குறுக்கிட்டு அந்த மசோதாவை, 'வாபஸ்' வாங்கும்படி, உத்தரவிடவேண்டும் என்பது நமது வேண்டுகோள்.

இந்தக் காரியம், தங்களுக்கு சிவானுக்கிரகம் தந்தருளும்.

மசோதாவை, வாபஸ் வாங்கும்படி உத்தரவிடாத பட்சத்தில், நாம் அனுப்பிய செங்கோலைத் திருப்பி நமக்கே அனுப்பிவிட வேண்டும். ஒரு மாதத்தவணை தருகிறோம்.

டில்லிக்கு நமது அன்பர்கள் வர இருக்கிறார்கள். அவர்கள் கூறும் விஷயத்தைக் கவனமாகக் கேட்டு, எங்கள் கண்ணியம் கெடாதபடி, பாதுகாப்புத் தரவேண்டும்.

மசோதா வாபசானால், செங்கோல் அங்கேயே இருக்கட்டும்.

மசோதாவை வாபஸ் பெறமுடியாது என்றால், செங்கோல் நமது ஆதீனத்துக்குத் திருப்பி அனுப்பிவிடவேண்டும். சிவனாணை!

இங்ஙனம்,
திருக்கயிலாய பரம்பரை.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
... Street, Kancheepuram.